# இஸ்லாமிய வழிகாட்டல் பயிற்சி

التربية الإسلامية

Moulaviya M.Y.Maziyya BA (Hons)

இஸ்லாமிய வழிகாட்டல் பயிற்சி என்பது கல்வி நிறுவனங்கள். பாடத்திட்டங்களில் போதிக்கின்ற தப்ஸீர் (அல்குர்ஆன் விளக்கம்), ஹதீஸ் (நபிமொழிகள்), தௌஹீத் (இறைக்கோட்பாடு), பிக்ஹ் (சட்டங்கள்.) போன்ற பாடங்கள் மாத்திரம் நோக்கமன்று, மாறாக, ஒவ்வொரு தனிமனிதனையும் இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படைகளைப் பேணி வாழப் பழக்குவதே நோக்கமாகும். ஏனெனில், இஸ்லாமிய வழிகாட்டல் திட்டம் என்பது நம்பிக்கைக் கோட்பாடுகள், சிந்தனைகள், அடிப்படைகள் ஆகியவற்றை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தல், பழக்கவழக்கங்கள், நற்குணங்கள், ஒழுக்கப்பண்பாடுகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிக் கொள்கிறது.

வேறு வார்த்தையில் கூறுவதாயின், அது மனிதர்களை இஸ்லாத்தின் வழிகாட்டல்களையேற்று, அவற்றின் அடிப்படையில் வாழப்பழக்குவதாகும். இதற்கென்று தனியான இலட்சியங்களும், சாதனங்களும், வழிமுறைகளும், அவற்றை மேற்கொள்கின்ற அமைப்புகளும் இருக்கின்றன.

அவ்வாறே, இஸ்லாத்தின் இத்திட்டமானது நம்பிக்கைக் கோட்பாடுகள், அடிப்படைகள், வணக்கவழிபாடுகள், கொடுக்கல்- வாங்கல்கள், மற்றும் மனிதவாழ்வின் ஏனைய எல்லாத்துறைகளையும் உள்ளடக்கியிருப்பது இஸ்லாதிற்கேயுரிய தனித்துவங்களில் ஒன்றாகும்.

சமகால ஆய்வாளர்கள் "தர்பியா" என்பதற்குப் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களைக் கூறுகின்றனர். இவைகளில், "இறைவனுடைய வழிகாட்டுதல்களை மனித வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மனித வாழ்கைகையைச் செம்மைப் படுத்துவதாகும்," இப்பணியின் போது சரீஅத் அனுமதித்த சாதனங்கள், வழிமுறைகள் போன்றவற்றைக் கையாள வேண்டும் என்பது மிகச் சுருக்கமானதும், பொருத்தமானதும் கருத்தாழம் மிக்கதுமான வரைவிலக்கணமாகும்.

எனவே, இப்பணியானது மனிதவாழ்வின் குறிப்பிட்டதொரு கட்டத்துடனோ, குறிப்பிட்டதொரு துறையுடனோ சுருங்கிவிடாது முழு மனித வாழ்வையும் உள்ளடக்கிக் கொள்கின்ற பரந்ததொரு பணியாகும். ஆகவே, இதனுடைய

www.manaruddawa.org

முழுப்பயனையும் அடைவதற்கு, மனிதன் இஸ்லாத்தின் வழிகாட்டல்கள் அனைத்தையும் முழுமையாகத் தனது வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனடிப்படையில், இஸ்லாத்தின் வாழ்க்கைத் திட்டத்தை உள்ளடக்கிய, குறைபாடுகளற்ற போதனைகள் என்ற வகையிலேயே தப்ஸீர், ஹதீஸ், அகீதா, ஒழுக்கப்போதனைகள் போன்றன போதிக்கப்படுகின்றன. அவ்வாறே மனித வாழ்வில் இபாதத்துக்களின் பங்களிப்பைத் தெளிவுபடுத்துவது இவற்றைப் போதிப்பதன் மற்றுமொரு பிரதனமான நோக்கமாகும். வணக்க வழிபாடுகள் என்பது உலகம் ஏற்றுக் கொண்ட உண்மையும் கூட. ஆகவே, இது அடிப்படை ஏதுமற்ற தியரியன்று.

ஏனெனில், ஒரு மனிதன் அல்லாஹ்வுடைய திருப்தியை இலக்காகக் கொள்ளல், அவனை விசுவாசங்கொள்ளல் போன்றன அல்லாஹ் தனது படைப்புகளில் புதைத்துவைத்துள்ள இயல்பான நிலையின் வெளிப்பாடுகளாகும். ஆகவே, ஒரு மனிதன் வணக்க வழிபாடுகளில் ஈடுபாடு கொள்வதானது இவ்வியல்பு நிலைக்கு இசைந்து செல்வதும், இவ்வியல்பை நிதர்சனப்படுத்துவதும் ஆகும்.

எனவே, இறைவனுடைய இவ்வியல்பான அறைகூவலுக்கு மனிதன் விடையளிக்காவிட்டால் அவனது ஆன்மாவுக்கு நிம்மதி ஏது? எங்கே அது உறுதியை, சமநிலைய அடையப் போகிறது? ஆகவே, இஸ்லாமிய வழிமுறையானது மனித வளர்ச்சி, அவன்பெறுகின்ற வழிகாட்டல்கள், அவனுடைய வாழ்க்கை போன்றவற்றில் நேரடியாகத் தாக்கம் செலுத்துகிறது.

இவற்றுக்கு மேலாக, இபாதத் என்பது மனித வாழ்வில் மிக விசாலமான தொரு துறையாகும். ஏனெனில், மனித வாழ்க்கை சரியான வழிகாட்டல்களின் அடிப்படையில் அமைந்து விடுமாயின் முழு வாழ்வும் "இபாதத்" வணக்கமாக மாறிவிடுகிறது. ஆகவே, ஒருவன் தனது வாழ்க்கையை வழிபாடாக மாற்றிக் கொள்ள இரு விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அவை:

1. தூய எண்ணம்
2. தனது செயற்பாடுகளை சரீஅத்தின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளல் போன்றவையாகும்.

மேலும், மனிதன் தனது வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்வதற்காகவே கல்வி கற்கின்றான். ஆகவே, இங்கு கற்பதும் இபாதத்தாகக் கருதப்படுகிறது. இபாதத் இல்லாத வாழ்க்கை சீர்பெறவோ, மலரவோ, மாட்டாது. ஏனெனில், வாழ்வின் வசந்தமே இபாதத்தில்தான் தங்கியுள்ளது.

www.mahaiudawa.org

www.manaruddawa.org